தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 6, திருவள்ளுவர் ஆண்டு–2044

2013 ஏப்ரல் 19, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்"

தொழில் செய்வதற்கு வேண்டிய பொருள், தேவையான கருவி, தகுந்த காலம், செய்ய வேண்டிய முறை, தகுந்த இடம் ஆகிய ஐந்தினையும் குறித்து நன்கு தெளிவாக ஆராய்ந்து செய்ய வேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 268, 269, 270 மற்றும் 272 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 271, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

271—

தொழிற்பேட்டை

***20101—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 ஏப்ரல் 19

(அ) சேலம் வட்டம், ஜாகீர் அம்மாபாளையம் அருகில் தொழிற்பேட்டை அமைக்கவும், சங்ககிரியில் தொழிற்பேட்டை அமைக்கும் பணியினை விரைவுபடுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஜாகீர் அம்மாபாளையம் அருகில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் தகுதியான அரசு புறம்போக்கு நிலம் கிடைக்கும்பட்சத்தில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சங்ககிரியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் அரசின் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதும், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் காலதாமதமாகின்றது என்பதைத் தங்கள்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டமானது அதிகமான தொழில்கள் நடைபெறக்கூடிய ஒரு மாவட்டமாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. அங்கே தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவதற்காகவும், குறு மற்றும் சிறு தொழில்கள் அங்கே பெருக்கம் அடைவதற்கும் இதுபோன்ற தொழில் நகரங்கள் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. எனவே, தொழில்வளத்தைப் பெருக்க வேண்டுமென்பதைக் கருத்திலேகொண்டு அங்கே ஒரு தொழில் நகரம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

2013 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மற்றும் சேலம் மாவட்டத்தைச் சுற்றியிருக்கிற பகுதிகளில் தொழிற்சாலைகள் வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் ரெட்டியூர் கிராமத்தில் தொழிற்பேட்டை ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று மேட்டூர் வட்டம், கருமலைக்கூடல் கிராமத்தில் தொழிற்பேட்டை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று ஓமலூர் வட்டத்தைப் பொறுத்தமட்டில் கருப்பூர் கிராமத்தில் இதேபோன்று தொழிற்பேட்டை ஒன்றும் இருக்கிறது என்பதையும், வீரபாண்டி வட்டம், வீரபாண்டி கிராமத்திலும் தொழில் மனைப் பிரிவுகள் இருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

அதுமாத்திரமல்ல, சங்ககிரி வட்டத்திலே உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க, அந்தப் பகுதியிலேயிருந்து பல்வேறு கருத்துருக்கள் பெறப்பட்டு, சேலம் சங்ககிரி வட்டத்திலே கஸ்தூரிப்பட்டி என்ற இடத்தில் புதிய தொழிற்பேட்டை உருவாக்க 51 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, நிலமெடுப்புப் பணிகள் தொடங்கப்பட்டன. தற்சமயம் நீதிமன்றத்தில் அதுசம்பந்தமாக வழக்கு உள்ள காரணத்தினால் அதைச் செய்ய இயலவில்லை. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 17 குறு தொழிற்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், அவைக்கு ஒரு செய்தியாகவும், உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசிக் குழுமம் ஏற்படுத்தப்பட்டு, உற்பத்தி தொடங்கி, சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட அந்தப் பகுதியில் மேலும் ஒரு ஜவ்வரிசிக் குழுமம், ஒரு தானியங்கி மற்றும் விசைத் தறிக் குழுமம், Stainless Steel Fabrication *குழுமம் ஏற்படுத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 272, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 273, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

273—

தடுப்பணை

***12348—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், மதனாஞ்சேரி பள்ளிப்பட்டு தடுப்பணையின் உயரத்தை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொதுமக்களிடமிருந்து இது குறித்து கோரிக்கை மனு ஏதும் இத்துறையில் பெறப்படாததால், வேலூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம் மதனாஞ்சேரி பள்ளிப்பட்டு தடுப்பணையின் உயரத்தை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 274, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.